**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.**

**முன்னிலை : செல்வி.S.ஆக்னஸ் ஜெப கிருபா, எம்.எல்.,**

நீதித்துறை நடுவர், திருவையாறு.

**2026–ம் வருடம் ஜூன் மாதம், 18–ம் நாள், வியாழக்கிழமை**

**ஆண்டு பட்டியல் வழக்கு எண்.67/2026**

**CNR NO: TNTJ16-0036362025**

அரசுக்காக: உதவி ஆய்வாளர்,
திருவையாறு காவல் நிலையம்,
குற்ற எண்.315/2025 ...குற்றமுறையிடுபவர்

//எதிராக//

கோபி (எ) கோபிநாத், (வயது 43/2026)
த/பெ. கல்யாணசுந்தரம்,
எண்.159, காலனித் தெரு,
கருப்பூர்,
திருவையாறு தாலுக்கா. ...எதிரி

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No. 814/2020 RG/F1 (P.Dis.No.36/2021) உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

| **S.No.** | **CASE SUMMARY** | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | **The Period of remand of the accused** | : | **Name of the Accused** | **Date of Remand** | **Release on** |
| | | | Gopi @ Gopinath | 14.11.2025 | - |
| (ii) | **The date of filing of the complaint/final report in the Court** | : | **Filing of Complaint** | **Filing of Final Report** | |
| | | | 13.11.2025 | 19.12.2025 | |
| (iii) | **The date of committal of the case to the Court of Session** | : | NIL | | |
| (iv) | **The date of questioning of the accused U/Sec.228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case maybe** | : | 18.03.2026 | | |

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.18 18:58:48 +0530

Date:18.06.2026 JM Court, Thiruvaiyaru.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (v) | **Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions U/Sec 317 of the Code** | : | **Crl.M.P.No.** | | **Date of Filing** | **Result** |
| | | | - | | - | - |
| (vi) | **Date of examination in-chief and cross-examination of a witness** | : | **Name of the Examination** | | **Date of Chief** | **Date of Cross** |
| | | | PW1 | Mohamed Riyaz | 16.04.2026 | 16.04.2026 |
| | | | PW2 | Sagunthala | 14.05.2026 | 14.05.2026 |
| | | | PW3 | Poongothai | 18.05.2026 | 18.05.2026 |
| | | | PW4 | Udhayachandran(IO) | 20.05.2026 | 20.05.2026 |
| (vii) | **Date of examination of the accused U/Sec 313 of the Code** | : | 25.05.2026 | | | |
| (viii) | **Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; and** | : | Not Applicable. | | | |
| (ix) | **Grant of stay by superior Courts and the results thereof** | : | **Sessions Court CMP Numbers** | **High Court No and Date of Stay** | | **Result** |
| | | | NIL | | | |

| | | |
|---|---|---|
| 1–வது குற்றச்சாட்டு | : | எதிரி, புகார்தாரரின் TN 49 BD 5935 என்று TVS XL இரு சக்கர வாகனத்தை திருடிச் சென்ற செயலுக்காக பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு (BNS) 303(2)–ன் கீழ் |
| எதிரிகளின் பதில் | : | பொய் வழக்கு. |
| நீதிபதியின் தீர்மானம் | : | குற்றவாளி இல்லை என முடிவு. |
| உத்தரவு (அ) தண்டணை | : | **1. எதிரி மீது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு (BNS) 303(2)–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப் படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரி குற்றவாளி** |

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.18 18:58:58 +0530

| | | |
|---|---|---|
| | | **அல்ல என்று, எதிரியை பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா பிரிவு (BNSS) 271(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**<br>**2. இவ்வழக்கில் எதிரிகள் தரப்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரங்கள் ரத்து செய்யப் படுகிறது.**<br>**3.இவ்வழக்கில் C.P.No. 383/2025–ல் ஒப்படைக்கப்பட்ட வழக்கு சொத்தான இரு சக்கர வாகனத்தை இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றுள்ள புகார்தாரர் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு முழுவதுமாக வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.** |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 19.12.2025–ம் தேதி ஆண்டுபட்டிகை வழக்கு எண்.67/2026 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் ஆவணங்களை பரிசீலித்தும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் இரண்டாம் நிலை அரசு உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A. ராஜராஜன், B.Com., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்றுவரை என் ஆய்வில் வைத்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**<u>தீர்ப்புரை</u>**

எதிரி, பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு (BNS) 303(2)–ன் கீழ் குற்றம் இழைத்துள்ளதாக திருவையாறு காவல் உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.18 18:59:04 +0530

**<u>1. கு.வி.மு.ச.பிரிவு.173–ன் கீழ் தாக்கலான குற்ற இறுதி அறிக்கையின்படி வழக்கின் சுருக்கம்:–</u>**

கடந்த 13.11.2025–ஆம் தேதி 14.30 மணிக்கு புகார்தாரரின் வீட்டின் முன்பு நிறுத்தியிருந்த புகார்தாரருக்குச் சொந்தமான, TN 49 BD 5935 என்ற TVS XL Heavy Duty இரு சக்கர வாகனத்தை, எதிரி திருடிச் சென்று, பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு (BNS) 303(2)–ன் கீழ் குற்றம் இழைத்துள்ளதாக திருவையாறு காவல் உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு.204–ன் கீழ் அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், கு.வி.மு.ச.பிரிவு.207–ன் கீழ் வழக்காவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. பின்னர் ஆவணங்களை பரிசீலித்தும், இருதரப்பின் வாதங்களை கேட்டும், எதிரி மீது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு (BNS) 303(2)–ன்கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டு, குற்றச்சாட்டை எதிரிக்கு எடுத்து கூறி விளக்கி வினவியபோது, எதிரி குற்றச்சாட்டை மறுத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**3.** அரசுதரப்பு வழக்கை நிரூபிப்பதற்காக அரசுதரப்பில் **அ.சா.1 முதல் 4** சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. எதிரி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**<u>4. அரசுத்தரப்பு சாட்சியங்களின் படி வழக்கின் சுருக்கம்:–</u>**

கடந்த 13.11.2025ம் தேதி மதியம் 2.30 மணியளவில் நடுக்கடையிலுள்ள புகார்தாரரின் வீட்டிற்கு வெளியே அவரது இருசக்கர வாகனமான TN49BD 5935

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.18 18:59:08 +0530

என்ற டிவிஎஸ் எக்சல் கெவிடியுட்டி வண்டியை நிறுத்திவிட்டு வீட்டிற்குள்ளே சென்று, வெளியே வந்து பார்த்தபோது வண்டியை காணவில்லை. யாரோ அந்த பகுதியில் வண்டியை ஓட்டி சென்றதாக அருகில் இருந்தவர்கள் சொன்னதால், தேடிப்பார்த்தும் கிடைக்காததால், திருவையாறு காவல் நிலையம் சென்று புகார்– அ.சா.ஆ.1 கொடுத்தார். போலிசார் வண்டியை கண்டுபிடித்து கோர்ட்டில் ஒப்படைத்ததால், CP No. 383/25ல் ஒப்படைக்கப்பட்ட இருசக்கர வாகனத்தினை மனு செய்து புகார்தாரர் வாங்கி கொண்டார்.

கடந்த 13.11.2025–ஆம் தேதியன்று முகமதுரியாஸ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று, காவல் நிலைய குற்ற எண்.315/2025, ச/பி.303 (2) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை–அ.சா.ஆ–5 வழக்கு பதிவுசெய்து, சம்பவம் இடத்திற்கு சென்று சாட்சிகள் பஞ்சாபிகேசன், மற்றும் ஹாஜாமைதீன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர்–அ.சா.ஆ.6 மற்றும் மாதிரி வரைபடம்–அ.சா.ஆ.7 தயார் செய்து, சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று, பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 மற்றும் மகஜர் சாட்சிகள் தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். புதுபைபாஸ் மேம்பாலம் அருகே வாகன சோதனையில் இருந்தபோது. அங்கு வந்த எதிரியை காரணம் கூறி, கைது செய்து அவர் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் சாஜகான் மற்றும் ஆயுப்கான் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து, ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியிடமிருந்து TN 49 BD 5935 TVS XL Heavy duty இருசக்கர வாகனத்தினை அ.சா.ஆ. 8 –கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி, வழக்கு சொத்தை அ.சா.ஆ.9– படிவம் 91–ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். கைது செய்யப்பட்ட எதிரி நிலையம் கொண்டுவந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். வழக்கின் புலன் விசாரணை முடித்து 29.11.2025–ஆம் தேதி எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

AGNES JEBA KIRUBA S Digitally signed by AGNES JEBA KIRUBA S Date: 2026.06.18 18:59:13 +0530

**6.** அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள சாட்சியங்கள் குறித்து, கு.வி.மு.ச.பிரிவு.313(1)(ஆ)—ன் கீழ் எதிரியிடம் வினவியபோது, எதிரி அவற்றை பொய்சாட்சி என்றும், பொய்வழக்கு என்றும் பதில் கூறினார். எதிரியின் பதில் பதிவு செய்யப்பட்டது. எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறியதன் பேரில் எதிரி தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

**7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

(i) எதிரி மீது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு (BNS) 303(2)—ன்கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?

(ii) எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன? என்பதேயாகும்.

**<u>8. தீர்வு:—</u>**

கடந்த 13.11.2025—ஆம் தேதி 14.30 மணிக்கு புகார்தாரருக்குச் சொந்தமான TN 49 BD 5935 என்ற TVS XL Heavy Duty இரு சக்கர வாகனத்தை புகார்தாரரின் வீட்டின் முன்பு நிறுத்தியிருந்ததை எதிரி திருடிச் சென்று, பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு (BNS) 303(2)—ன் கீழ்குற்றம் இழைத்ததாக அரசு தரப்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 13.11.2025—ஆம் தேதி 13.30 மணிக்கு வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்பட்டு, 13.11.2025—ஆம் தேதி புகார் அளிக்கப்பட்டு, அன்றையதினமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, 14.11.2025 அன்று இரவு 8.00 மணிக்கு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வழக்கு விசாரணை 29.11.2025—ம் தேதி முடிவுற்று, குற்ற இறுதி அறிக்கை 16.03.2026 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

AGNES JEBA KIRUBA S Digitally signed by AGNES JEBA KIRUBA S Date: 2026.06.18 18:59:16 +0530

இவ்வழக்கில் புகார்தாரர் அ.சா.1–ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் அ.சா.2, 3–ஆகவும், புலன் விசாரணை செய்த அதிகாரி–அ.சா.4–ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். ஏனைய பட்டியல் சாட்சிகள் அரசு தரப்பில் விசாரணை செய்யப்படவில்லை.

புகார்தாரரான–அ.சா.1 தனது சாட்சியத்தில், தனது வண்டி காணாமல் போனதாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், போலிசார் வண்டியை கண்டுபிடித்துவிட்டதாக சொன்னதால், மனு தாக்கல் செய்து பெற்றுக் கொண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட அ.சா.ஆ.2 புகைப்படத்தில் உள்ள வண்டி தான் புகார்தாரருடையது என புகார்தாரர் அடையாளம் காண்பித்துள்ளார். புகார்தாரர் கொடுத்த புகாரின்பேரில் எதிரி யார் என தெரியவில்லை என குறிப்பிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, வழக்கு விசாரணையில் இருந்தபோது, புலன் விசாரணை அதிகாரி 14.11.2025–ஆம் தேதி காலை 8.30 மணிக்கு புது பைபாஸ் ரோட்டில் வாகன தணிக்கை செய்தபோது, புகார்தாரரது இரு சக்கர வாகனத்தில் எதிரி வந்தார் என்றும், அவரை கைது செய்து விசாரித்தபோது, அவர் சாட்சிகள் ஷாஜகான் மற்றும் ஆயுப்கான் முன்னிலையில் பதிவு செய்ததாகவும், அவர் ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தை மகஜரில் கைப்பற்றியதாகவும் சொல்லி எதிரிக்கு எதிராக புலன் விசாரணை அதிகாரியால் இந்த குற்ற வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புலன் விசாரணை அதிகாரி–அ.சா.4 மேற்படி சங்கதி குறித்து சாட்சியம் அளித்துள்ளார். புலன் விசாரணை அதிகாரி தரப்பில் சாட்சியமளித்துள்ள அ.சா.4–உதவி ஆய்வாளர், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி புகார்தாரரிடமிருந்து புகாரை பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.18 18:59:20 +0530

இவ்வழக்கில் எதிரி கொடுத்ததாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலம் தாக்கல் செய்யப்படவில்லை. ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் சாட்சி பட்டியலில் சேர்க்கப்படவில்லை. நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை. புது பைபாஸ் ரோட்டில் இருசக்கர வாகனத்துடன் வந்த எதிரியை கைது செய்தபோது, அவரிடமிருந்து, இரு சக்கர வாகனம் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்டுள்ள நிலையில், கைப்பற்றுதல் மகஜரில் அ.சா.2 பூங்கோதை, அ.சா.3 சகுந்தலா ஆகியோர் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளனர். கைப்பற்றுதல் மகஜரில் வாகனம் கைப்பற்றப்பட்ட இடமாக "எதிரி காட்டிய இடத்தில் இருந்து கைப்பற்றப்பட்டது" என்று சொல்லப்பட்டுள்ளது. எந்த இடம் என்று வழக்கில் தெளிவுபடுத்தப்படவில்லை.

கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான அ.சா.2, 3 தங்கள் சாட்சியங்களில், கோனேரிராஜபுரம் ரோட்டில் தாங்கள் இருவரும் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தபோது. போலிசார் கையொப்பம் கேட்டதால் கையொப்பம் போட்டோம் என்றும், அதில் அ.சா.3 போலிசார் அந்த இடத்தில் ஒரு நபரை காரில் ஏற்றிச் சென்றார்கள் என்றும், அந்த நபர் எதிரியா என்று தனக்குத் தெரியாது என்றும் சாட்சியம் அளித்து பிறழ்சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்துள்ளனர்.

அ.சா.1–ன் சாட்சியம் மற்றும் புகாரின் மூலம் இரு சக்கர வாகனம் திருடப்பட்டதாக தெரியவந்தாலும், எதிரி மேற்படி வாகனத்தை திருடினார் என்பதையோ, எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்பதையோ, எதிரியிடமிருந்து மேற்படி வாகனம் கைப்பற்றப்பட்டது என்பதையோ, அரசு தரப்பில் உரிய முறையில் நிரூபணம் செய்யவில்லை.

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் எதிரி மீதான குற்றச்சாட்டை பொறுத்தவரையில், அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, மேற்கண்ட சந்தேகங்களின்

AGNES JEBA KIRUBA S Digitally signed by AGNES JEBA KIRUBA S Date: 2026.06.18 18:59:26 +0530

பலனை எதிரிக்கு அளித்து, எதிரி பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு (BNS) 303(2)–ன் கீழ் குற்றவாளி அல்ல என்று பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா பிரிவு.271(1)–ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்மானித்து, எதிரி விடுதலை செய்யப்பட வேண்டுமென்றும், இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>9. முடிவாக,</u>

**1. எதிரி மீது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு (BNS) 303(2)–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப் படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரி குற்றவாளி அல்ல என்று, எதிரியை பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா பிரிவு.271(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**2. இவ்வழக்கில் எதிரிகள் தரப்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரங்கள் ரத்து செய்யப் படுகிறது.**

**3.இவ்வழக்கில் C.P.No. 383/2025–ல் ஒப்படைக்கப்பட்ட வழக்கு சொத்தான இரு சக்கர வாகனத்தை இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றுள்ள புகார்தாரர் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு முழுவதுமாக வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று **2026**–ம் ஆண்டு **ஜூன்** மாதம் **18**–ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.18 18:59:31 +0530

நீதித்துறை நடுவர்,

திருவையாறு.

**அரசுத்தரப்பு சாட்சிகள் :—**

| | | |
|---|---|---|
| அ.சா1 | முகமது ரியாஸ் (புகார்தாரர்) | புகார்தாரர் |
| அ.சா.2 | சகுந்தலா | கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| அ.சா.3 | பூங்கோதை | கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| அ.சா.4 | உதயசந்திரன் | புலன் விசாரணை அதிகாரி |

**அரசுதரப்பு சான்றாவணங்கள்:—**

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 13.11.2025 | புகார் மனு – அசல் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | – | சி.பி. 383/2025–ல் ஒப்படைக்கப்பட்ட இருசக்கர வாகனத்தில் புகைப்படங்கள் 4 எண்ணிக்கை – அசல் | அ.சா.1 |
| அ.சா.ஆ.3 | 14.11.2025 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள சாட்சி–2–ன் 2–வது கையெழுத்து அசல் | அ.சா.2 |
| அ.சா.ஆ.4 | 14.11.2025 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள சாட்சி–3–ன் 1–வது கையெழுத்து அசல் | அ.சா.3 |
| அ.சா.ஆ.5 | 13.11.2025 | முதல் தகவல் அறிக்கை – அசல் | அ.சா.4 |
| அ.சா.ஆ.6 | 14.11.2025 | பார்வை மகஜர் – அசல் | அ.சா.4 |
| அ.சா.ஆ.7 | 14.11.2025 | மாதிரி வரைபடம் –அசல் | அ.சா.4 |
| அ.சா.ஆ.8 | 14.11.2025 | கைப்பற்றுதல் மகஜர் – அசல் | அ.சா.4 |
| அ.சா.ஆ.9 | 14.11.2025 | படிவம்–91–அசல் | அ.சா.4 |

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருட்கள்:—**
இல்லை.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.18 18:59:35 +0530

**குறிப்பு:—**

1. எந்த சாட்சியமும் மூன்று முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கில் முடிவு குறித்து காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.18 18:59:39 +0530

நீதித்துறை நடுவர்,
திருவையாறு

.